தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 176/ந/2024

நாள். 25.03 .2025

திரு.R.Ma.பார்த்தீபன்,
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையாளர்,
மன்னார்குடி நகராட்சி, மன்னார்குடி
திருவாரூர் மாவட்டம்.

2) திரு.V.கண்ணதாசன்,
கட்டிட உரிமையாளர், மன்னார்குடி.
திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆசாத் தெரு, கதவு எண்.53/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.Ma.பார்த்தீபன் என்பவரின் 24.09.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2024 அன்று பெறப்பட்டு, 176/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆசாத் தெரு, கதவு எண்.53/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.Ma.பார்த்தீபன் என்பவர் தமது 24.09.204 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

i. " மன்னார்குடி வார்டு 1 பிளாக் 56 சர்வே எண்.3540 அரசு புறம்போக்கு கோயில் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் மொத்த 6237 சதுரஅடி விஸ்தீர்ணத்தில் தோராயமாக 2500 சதுர அடி கீழ் தளம், அத்துடன் தோராயமாக 2500 சதுர அடி மேல் தளம் என தோராயமாக மொத்தம் 5000 சதுர அடி RCC இரண்டடுக்கு கட்டடம் (வீடு) நகராட்சி அனுமதி இன்றி கட்டப்பட்டுள்ளது.

ii. இந்த வழக்கு, அனுமதியற்ற விதிமீறல் கட்டடம் (NO BUILDING PLAN, NO APPROVAL, NO COMPLETION CERTIFICATE, ETC.) கட்டடத்தின் மேல் மன்னார்குடி நகராட்சி எடுக்க வேண்டிய அமலாக்க நடவடிக்கை தொடர்பானது.

iii. மேற்கண்ட கட்டுமானத்திற்கு கட்டட அனுமதி இல்லை. ஆனாலும் தற்போது வரை இரண்டு தளங்கள் கட்டப்பட்டுவிட்டது. எனவே, புகார் அளித்து இருந்தேன். உரிய புகைப்படங்களையும் நகராட்சிக்கு சமர்ப்பித்து இருந்தேன்.

iv. நகராட்சியால் கள ஆய்வு செய்யப்பட்டபின், கட்டி வரும் கட்டடம் தொடர்பாக நகராட்சியால் அறிவிப்பு அனுப்பப்பட்டதாக அந்நாள் நகராட்சி ஆணையர் எழுத்துப்பூர்வமாக 2024 ஆம் வருடம் தெரிவித்து உள்ளார். கட்டடம் கட்டி வந்த நிலையில், வட்டாட்சியரும், தான் தடையின்மை சான்று வழங்கவில்லை என்று 2024 ஆம் வருடம் பதில் அளித்துள்ளார். அங்கு இரண்டு மாடி கட்டடம் கட்டி வரும்போது நகராட்சியில் இருந்து அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

v. மேற்கண்ட அனுமதியில்லா கட்டடத்திற்கு அனுமதி பெறுவதற்காக சிலர் முயற்சித்து வந்தனர். அதனையும் நகராட்சிக்கு எழுத்து பூர்வமாக தெரிவித்து இருந்தேன். அப்போதைய நகராட்சி ஆணையர் (பட்டுக்கோட்டையில் நகராட்சி ஆணையராகவும் கூடுதல் பொறுப்பாக மன்னார்குடி நகராட்சி ஆணையர்) திரு. குமரன் என்பவர் அதனை மறுத்து பதில் அளித்து இருந்தார்.

vi. அடுத்த சில நாட்களில் கூடுதல் பொறுப்பு ஆணையர் திரு.குமரன் பணியில் இருந்து சென்றுவிட்டார்.

vii. இந்த நிலையில் வேறு ஒரு வினோதமான விசித்திரமான ஒரு கடிதத்தை புதியதாக பொறுப்பேற்ற நகராட்சி ஆணையர் திருமதி. சியாமளா அவர்கள் எனக்கு அனுப்பி இருந்தார். அதன்படி, அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு B Memo ரசீது செலுத்தி உள்ளபடியால் வருவாய்த்துறைக்கு பார்வர்டு செய்து உள்ளார் என்பதன் மூலம் அதன் பதிலின் நோக்கம், அனுமதி இன்றி கட்டிய கட்டடத்தின் மீது L&S மற்றும் அமலாக்க நடவடிக்கை எடுக்காமல் தவிர்க்கவே என்பது சாதாரண மனிதனின் அறிவிற்கும் எட்டும் அளவிற்கான அப்பட்டமான உண்மையாகும்.

viii. மேற்கண்ட நகராட்சி அறிவிப்பு அனுப்பியதன்பின், தற்போது வரை, அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டடத்தில் L&S நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

ix. மேற்கண்ட நகராட்சி அறிவிப்பு அனுப்பியதன்பின், தற்போது வரை அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டடத்தில் அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

x. சம்பந்தப்பட்ட அதிகாரி மெத்தனமாகவும், அலட்சியமாகவும் செயல்பட்டு இருந்தால் வன்மையாக கண்டிப்பதுடன் நில்லாமல், அமலாக்க நடவடிக்கை எடுக்காதபட்சத்தில், அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட உத்தரவு கோருகிறேன்.

xi. அனுமதி இல்லாத கட்டடம் என்று நகராட்சி ஆணையருக்கு தெரியும். அதனால் நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டது என்பது நகராட்சி ஆணையருக்குத் தெரியும். ஆனாலும் வருவாய்த்துறைக்கு பார்வர்டு செய்து இருப்பதை சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் காணலாம். அத்துடன் ஆணையரின் கடமை முடிகிறதா என்ற கேள்வி எழுவதை தவிர்க்க இயலாது.

xii. மேற்கண்ட சர்வே எண்.3540 என்பது சர்க்கார் புறம்போக்கு வகையில் TSLR உள்ளிட்ட நகராட்சி ஆவணங்களில் இருந்து வருகின்றது. கோயில் பயன்பாடு உள்ள ஆக்கிரமிப்பு கடும் ஆட்சேபனை உள்ள நிலம் ஆகும். இதில் இரண்டடுக்கு மாடி வீடு கட்ட அனுமதி இல்லை.

xiii. மேற்கண்ட கட்டுமானத்திற்கு கட்டட முழுமை பெற்ற சான்றிதழ் கிடையாது. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசாணைகள், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள், தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் மற்றும் தமிழ்நாடு நகரத் திட்டச் சட்ட விதிகள் ஆகியவற்றிற்கு மீறலாக அமைந்து உள்ள அனுமதியற்ற கட்டடம்.

xiv. நகராட்சிகளின் மண்டல இயக்குநரகத்திற்கும் இது சம்பந்தமான தகவல்களை தெரிவித்து மேல் முறையீடு செய்தேன். அவற்றிற்கு நகராட்சி இடைமறித்து மேல் முறையீட்டாளரின் பதில் அல்லாமல், ஏற்கனவே கொடுத்த அதே பதிலை மேல்முறையீட்டிற்கும் அளிக்கிறது.

xv. உரிய மன்றத்தின் முன்பு வழக்கு தொடங்குவதை நகராட்சி அலுவலர்களின் கவனத்திற்கு முதலமைச்சர் பிரிவின் வழியே தெரிவித்தும், நகராட்சிக்கு மனுக்கள் அனுப்பியும் நடவடிக்கை எடுக்காமல் சுணக்கம் காட்டப்படுகின்றது. அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்து வருகிறது. மேலும் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கைக்கு வருவாய்த்துறைக்கு கடிதம் அனுப்பியது தவிர எத்தனை நாளுக்குள்ளாக ஆக்கிரமிப்பை அகற்றுவார்கள் என்று சொல்வதில்லை.

xvi. மேற்படி சர்வே எண். 3540–ல் அமைந்துள்ள கட்டுமானத்தில் (வீடு) அமலாக்க நடவடிக்கை எடுக்காமல், இது சம்பந்தமாக முறை மன்றத்தின் முன்பு தற்போது வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்த நிலையிலும், ஆக்கிரமித்து அனுமதி இல்லாமல் கட்டிய கட்டுமானத்திற்கு ஆதரவாக அமலாக்க நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர்.

xvii. இது குறித்து நகராட்சி அலவலகத்திற்கு பல முறை சென்றும், காலை முதல் இரவு வரை காக்க வைத்து விட்டு அனுப்பிவிட்டதால், இந்த மனுவை நகராட்சி மண்டல இயக்குநர் அவர்களுக்கும் முறையீட்டாளர் அளித்து இருந்தார்.

xviii. நகராட்சி ஆணையர் அவர்களிடம் கொடுத்த மனுக்களுக்கு தாமதமான பதிலும் பின்பு புலத்தணிக்கை செய்யாதவாறு, அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளமல் எவ்வெத்தனை சால்ஜாப் உண்டோ அத்தனையும் சொல்லப்பட்டது. முறையீட்டாளரும் மனுக்கள் அளித்து ஓயவில்லை. தொடர்ந்து சட்டத்தின்மேல் நம்பிக்கை கொண்டு மனுக்கள் அளித்து வந்திருந்தார்.

xix. எனவே கட்டுமானத்தில் DEMOLITION அமலாக்க நடவடிக்கை எடுப்பதுடன், ஆக்கிரமிப்பையும் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள செய்யவேண்டும். அதிகாரிகளுக்கு புரியும் மொழியில் அறிவுறுத்தவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து மன்னார்குடி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 03.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் விரிவான அறிக்கை கோரப்பட்டது.

3. மன்னார்குடி நகராட்சி ஆணையர் தனது 02.01.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

i. "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவில் வரப்பெற்ற புகார் மனுவில் திரு. பார்த்திபன் சங்கர் என்பவர் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆசாத் தெருவில் திருமதி. சி. கோமதி, க/பெ.T. சிங்காரவேலு என்பவர் நகராட்சி அனுமதியின்றி வார்டு–1, பிளாக்–56, நகரப்புல எண்.3540, சர்க்கார் புறம்போக்கு கோயிலுக்கு சொந்தமான இடத்தில் குடியிருப்பு கட்டிடம் கட்டி குடியிருந்து வருவதாகவும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

ii. மன்னார்குடி நகராட்சியின் அறிவிப்பு கடிதத்தில் ஆசாத் தெருவில், திருமதி. சி. கோமதி க/பெ.T.சிங்காரவேலு என்பவர் நகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அனுமதியற்ற கட்டுமான எண்.5/2024 நாள் 20.06.2024 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது.

iii. திருமதி. சி. கோமதி அவர்களின் 15.07.2024 தேதிய பதில் கடிதத்தில் மேற்கண்ட கோவில் இடத்தில் சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக, பல தலைமுறைகளாக அப்பகுதியில் அமைந்துள்ள திரௌபதி அம்மன் கோயிலின் பரம்பரை பூசாரியாக உள்ளதால் கோயில் பகுதியில் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், குடியிருக்கும் மாடி வீடு சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு வீட்டுவரி, மின் கட்டணம் செலுத்தியுள்ளதாகவும், 70 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி இடத்திற்கு வருவாய் துறை மூலம் உரிய பீம் ரசீது அரசுக்கு செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

iv. மேலும் தாங்கள் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டி வசித்து வருகிறோம் என்பதற்கான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். கட்டிட அனுமதி தடையின்மை சான்று வழங்க வட்டாட்சியர், மன்னார்குடி அவர்களுக்கு மனு அளித்துள்ளார்.

v. திரு.பார்த்திபன் சங்கர், ஆசாத் தெரு, மன்னார்குடி என்பவர் திருமதி.சி.கோமதி என்பவர் மீது வார்டு–1, பிளாக்–56, நகரப்புல எண்.3540, சர்க்கார் புறம்போக்கு கோயிலுக்கு சொந்தமான இடத்தில் நகராட்சி அனுமதியின்றி குடியிருப்பு கட்டிடம் கட்டியுள்ளதற்கு மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவில் தொடர்ந்து புகார் அளித்துள்ளார்.

vi. மேற்குறிப்பிட்ட இடம் குறித்த ஆவணங்களில் சர்க்கார் புறம்போக்கு, கோவிலுக்கு சொந்தமான இடம் என உள்ளதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சி கடித ந.க. எண்.2469/2024/எப்1, நாள் 23.08.2024 மற்றும் 30.09.2024–ல் வட்டாட்சியர், மன்னார்குடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

vii. மேலும், திருமதி.சி.கோமதி, க/பெ.T.சிங்காரவேலு என்பவருக்கு நகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அனுமதியற்ற கட்டுமான எண்.5/2024 நாள் 27.12.2024 அன்று அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரும் 19.12.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.R.Ma.பார்த்திபன் என்பவர் 19.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:

"மன்னார்குடி வார்டு எண்.1 பிளாக் 56, சர்வே எண்.3540, ஆசாத் தெருவில் திருமதி.கோமதி சிங்காரவேலன் என்பவரால், அரசு புறம்போக்கு நிலத்தில் சுமார் 2500 சதுர அடி பரப்பளவில் தரை

தளமும் மற்றும் சுமார் 2500 சதுர அடி பரப்பளவில் முதல் தளமும் ஆகிய இரண்டு ஆர்.சி.சி. அடுக்குமாடி கட்டடம் மன்னார்குடி நகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கட்டடத்திற்கு வரைபடம் மற்றும் கட்டட அனுமதி தமிழ்நாடு நகர ஊரமைப்பு இயக்ககம் மற்றும் நகராட்சியின் அனுமதி பெறப்படவில்லை.

மேற்படி கட்டடத்திற்கு சொத்துவரி நகராட்சியால் விதிக்கப்படவில்லை.

மேலும் இக்கட்டிடத்திற்கு வட்டாட்சியரின் தடையின்மை சான்றும் பெறப்படவில்லை.
இவ்வாறு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் குறித்து புகார் தெரிவித்தும் முன்னாள் ஆணையர் திரு.குமரன் என்பவர் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனையே தற்போது உள்ள நகராட்சி ஆணையரும் கடைபிடித்து வருகிறார்.

மேலும், மேற்படி அனுமதியின்றி கட்டடம் தொடர்பாக எனது 19.12.2024 நாளிட்ட எழுத்துப்பூவர்மான வாக்குமூலத்தையும் எனது வாக்குமூலமாகவும் ஏற்று கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அனுமதியின்றி கட்டப்பட்ட மேற்படி கட்டடத்தை அகற்றிட ஆவண செய்யுமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் தனது 18.12.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அரசு செயலர் அவர்களின் காணொலி ஆய்வில் இறுதி ஒப்புதல் குறித்த ஆலோசனை கூட்டம் 19.12.2024 அன்று நடைபெற உளளதால், விசாரணை தேதியினை வேறு தேதிக்கு மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதனை ஏற்று எதிர் மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரும், மனுதாரரும், மற்றும் 2–வது எதிர்மனுதாரரான திருமதி.கோமதி என்பவரும் 03.01.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7) எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் சார்பில் மன்னார்குடி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராகப் பணிபுரியும் ஆர்.விஜயகுமார் என்பவர் 03.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி, தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவர் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள திருமதி.கோமதி க/பெ.(லேட்) திரு.சிங்காரவேல் அவர்கள் வார்டு எண்.1, பிளாக் எண்.56, நகரளவை எண்.3540–ல் நகராட்சி அனுமதியின்றி சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் வீடு கட்டி வசித்து வருகின்றார்.

மேற்கண்ட இடம் அரசு சர்க்கார் புறம்போக்கு, கோயில் நிலம் என வகைபாடு நகரளவை ஆவணத்தில் உள்ளது. மனுதாரர் அனுமதி கோரியபோது, நகராட்சி கோயில் அல்லது வருவாய் துறையிடமிருந்து தடையின்மை சான்று பெற்று சமர்ப்பிக்காததால், அனுமதி வழங்கப்படவில்லை.

மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு அனுமதியற்ற கட்டுமான எண்.5/2024 என எண்ணிட்டு 20.06.2024 நாளிட்டு நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டிடம் கோயில் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது என்பதற்கு வருவாய்த்துறையைச் சேர்ந்த நகர் சார் ஆய்வாளரிடம் அறிக்கை பெற்று இம்முறைமன்ற நடுவத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படும்.

மனுதாரர் திரு.R.Ma.பார்த்திபன் தெரிவித்துள்ளவாறு திருமதி.கோமதி என்பவர் சர்க்கார் புறம்போக்கு கோயில் நிலத்தில் அனுமதியின் I கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டு அக்கட்டிடத்தினை உரிய ஆவண ங்களுடன் விண்ணப்பிக்கும்பட்சத்தில் உரிய

விதிகளுக்குட்பட்டு வரன்முறை செய்து கொள்ள 20.06.2024 மற்றும் 27.12.2024 ஆகிய தேதிகளில் நகராட்சியால் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளார்.

8) 2–வது எதிர்மனுதாரரான திருமதி.கோமதி என்பவரின் சார்பில் அவரது சகோதரர் திரு.கண்ணதாசன் என்பவரை விசாரணையில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதின் பேரில் திரு.கண்ணதாசன் என்பவர் 03.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவர் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார்.

“ மனுதாரர் எனது சகோதரி திருமதி.கோமதி அவர்கள் கட்டியிருக்கும் வீடு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது.

வார்டு–1, பிளாக் எண்.56, நகரளவு எண்.3540 என்பது சர்க்கார் புறம்போக்கு கோயில் நிலம், மேற்படி நிலம் அரசு புறம்போக்கு கோயில் நிலம் தான் என்பதற்கு உரிய ஆவணத்தை 45 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்படி நிலத்தில் சுமார் 150 ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாக திரௌபதியம்மன் கோவில் பூசாரியாக எனது சகோதரியின் கணவர் திரு.சிங்காரவேலு அவர்கள் மற்றும் கமலப்ப பூசாரி வகையறாக்கள் வசித்து வந்தார்கள் எனது சகோதரியின் கணவர் காலமாகிய பின்னர் எனது சகோதரியின் குடும்பம் மேற்படி இடத்தில் கடந்த 35 வருடமாக சொந்தமாக வீடுகட்டி வசித்து வருகிறது. அந்த இடத்திற்கு நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய குடிநீர் வரி, சொத்துவரி முதலானவைகளை தவறாமல் செலுத்தி வருகிறார்கள். வருவாய்த்துறைக்கு B மெமோ ரசீது செலுத்தியுள்ளோம்.

மேற்கண்ட கட்டிடத்திற்கு நகராட்சியின் அனுமதி கோரியபோது, வட்டாட்சியரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று விண்ணப்பித்தால் அனுமதி வழங்கப்படும் என தெரிவித்தார்கள். இதுவரை தடையின்மை சான்று எங்களுக்கு வட்டாட்சியரிடமிருந்து கிடைக்கபெறவில்லை. தடையின்மை சான்று கிடைக்கும்பட்சத்தில், நகராட்சியில் விண்ணப்பித்து கட்டிடத்திற்கு அனுமதி பெற்று விடுவோம் என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நகராட்சியால் வழங்கப்பட்டுள்ள அறிவிப்பின்படி உரிய அபராதத்தொகையினை செலுத்தி வரன்முறை செய்து கொள்ளவும் தயாராக உள்ளோம்” என தெரிவித்துள்ளார்.

9) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மன்னார்குடி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் 2–வது எதிர்மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் திரு.R.Ma.பார்த்திபன் என்பவரின் புகார் மனுவில் திருமதி.கோமதி என்பவரால் அரசு புறம்போக்கு கோயில் நிலத்தை ஆக்கிரமித்து நகராட்சி அனுமதி இன்றி இரண்டடுக்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளதை அகற்றிட கேட்டுக்கொண்டுள்ளார்.

மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள இடம் அரசு சர்க்கார் புறம்போக்கு,கோயில் நிலம் என வகைபாடு நகரளவை ஆவணத்தில் உள்ளதாகவும், மனுதாரர் கட்டட அனுமதி கோரியபோது, கோயில் அல்லது வருவாய் துறையிடமிருந்து தடையின்மை சான்று பெற்று சமர்ப்பிக்காததால், அனுமதி வழங்கப்படவில்லை எனவும், மேற்கண்ட கட்டடத்திற்கு அனுமதியற்ற கட்டுமான எண்.5/2024 என எண்ணிட்டு 20.06.2024 நாளிட்ட நகராட்சியின் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட கட்டடம் கோயில் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது என்பதற்கு வருவாய்த் துறையைச் சேர்ந்த நகர சார் ஆய்வாளரிடம் அறிக்கை பெற்று இம்முறைமன்ற

நடுவத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படும் என மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மன்னார்குடி ஆணையரின் 24.01.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் மன்னார்குடி, நில அளவை பிரிவு நகர சார் ஆய்வாளரின் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில் "மன்னார்குடி நகரம் வார்டு 1, பிளாக் 56, நகரளவை எண்.3540, ஆசாத் தெருவில் கோவில் இடத்தை ஆக்ரமணம் செய்திருப்பது தொடர்பாக ஸ்தல ஆய்வு செய்தபோது மேற்படி நகரளவை பதிவேடுகளின்படி வார்டு–1, பிளாக் 56, நகரளவை எண்.3540–ல் 0.579.5 ச.மீ. விஸ்தீரணம் உள்ளதாக பதிவாகியுள்ளது. மேலும் சர்க்கார் புறம்போக்கு வகைபாட்டில் திரௌபதியம்மன் கோவில் என்று உள்ளது. திருமதி.சி.கோமதி க/பெ. T.சிங்காரவேலு என்பவர் மேற்படி இடத்தில் மாடி வீடு கட்டி வசித்து வருகிறார். நகரளவை ஆவணங்களின்படி மேற்படியாரின் இடம் வார்டு–1, பிளாக் 56, நகரளவை எண்.3540–ல் அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது".

மேற்படி நிலத்தில் சுமார் 150 ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாக திரௌபதியம்மன் கோவில் பூசாரியாக திருமதி.கோமதி என்பவரின் கணவர் காலஞ்சென்ற திரு.சிங்காரவேலு மற்றும் கமலப்ப பூசாரி வகையறாக்கள் வசித்து வந்ததாகவும், மேற்படி இடத்தில் கடந்த 35 வருடமாக சொந்தமாக வீடுகட்டி வசித்து வருவதாகவும், நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய குடிநீர் வரி, சொத்துவரி முதலானவைகளை தவறாமல் செலுத்தி வருவதாகவும், வருவாய்த்துறைக்கு பீ மெமோ ரசீது செலுத்தியுள்ளதாகவும் 2–வது எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டுள்ள இடம் நகரளவை பதிவேடுகளின்படி திரௌபதியம்மன் கோவிலுக்கு சொந்தமான சர்க்கார் புறம்போக்கு வகைபாட்டில் உள்ள இடத்தில் திருமதி.சி.கோமதி என்பவர் நகராட்சி அனுமதி பெறப்படாமல், மாடி வீடு கட்டி வசித்து வருவதால், நகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அனுமதியற்ற கட்டுமான எண்.5/2024 நாள் 20.06.2024 அன்று அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மன்னார்குடி நகராட்சி ஆணையர் மற்றும் மன்னார்குடி நில அளவைப்பிரிவு நகர சார் ஆய்வாளர் ஆகியோரின் அறிக்கைகள் மூலம் தெரியவருகிறது.

நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் மேற்குறிப்பிட்ட இடம் குறித்த ஆவணங்களில் சர்க்கார் புறம்போக்கு, கோவிலுக்கு சொந்தமான இடம் என உள்ளதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சி கடித ந.க.எண்.2469/2024/எப்–1 நாள் 23.08.2024 மற்றும் 30.09.2024–ல் வட்டாட்சியர், மன்னார்குடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள ஆக்கிரமிப்பு குறித்து வருவாய் துறை முடிவெடுக்க வேண்டும் என்ற போதிலும், இந்நேர்வில் அனுமதியற்ற கட்டுமானம் என்ற வகையில் நகராட்சியின் நடவடிக்கை அவசியமாகிறது. மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பாக 23.08.2024 மற்றும் 30.09.2024 நாளிட்ட கடிதங்களை தவிர்த்து நகராட்சி, வருவாய் துறையுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற முனைந்ததாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் அறியமுடியவில்லை. புறம்போக்கு நிலத்தில் அனுமதியற்ற கட்டடம் உள்ளதாக நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதால், இது சம்பந்தமாக அவரது அடிப்படை கடமையை சரிவர செய்தல் வேண்டும். பொறுப்பை தட்டிக்கழிக்க கூடாது. எனவே, புகார் அளிக்கப்பட்டுள்ள கட்டுமானம் குறித்து நகராட்சி ஆணையர், வட்டாட்சியர் மற்றும் பிறதுறைகளுடன் கலந்தாலோசித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம்,1998–ன்படி ஆக்கிரமணம் மற்றும் அனுமதியற்ற கட்டிடங்கள் தொடர்பாக மாண்பமை உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள மன்னார்குடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 25 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.R.Ma.பார்த்தீபன்,
   எண்.53/1, ஆசாத் தெரு,
   மன்னார்குடி–614 001,
   திருவாரூர் மாவட்டம்.

2. திருமதி. சி. கோமதி,
   53–ஏ, ஆசாத் தெரு,
   மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
   மன்னார்குடி நகராட்சி,
   மன்னார்குடி,
   திருவாரூர் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்